# ஒன்ராறியோ தொழில் நியமங்கள் சட்டம்

— ஒரு தகவல் வழிகாட்டி —

## “ உங்களுடைய உரிமைகள் எவை என்பது உங்களுக்குத் தெரியுமா? ”



### தொழில் நியமங்கள் என்றால் என்ன?

ஒரு பணியாளராக **உங்களுக்கு இருக்கும் குறைந்தபட்ச சட்ட உரிமைகள் மற்றும் ஆதாயங்களை தொழில் நியமங்கள்** சட்டம் (ESA) ஒன்ராறியோவில் நிர்ணயிக்கிறது.

### ESA ஆல் காப்பீடு செய்யப்படுபவர்கள் யார்?

ஒன்ராறியோவில் **நீங்கள்** வேலை செய்கிறீர்கள் எனில், தொழிற்சங்கத்தில் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன ESA உங்களைக் காப்பீடு செய்யக் **கூடும்.**

### ஒன்ராறியோவின் மிகக் குறைந்த ஊதியம்

பெரும்பாலான பணியாளர்களுக்கு **குறைந்தபட்ச** ஊதியம் வழங்கப்பட வேண்டும். இந்தக் குறைந்தபட்ச ஊதியம் என்பது ஆண்டுதோறும் நுகர்வோர் விலைக் குறியீட்டில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் ஃபார்முலா ஒன்றன் மூலம் சரிசெய்யப்படும். **புதிய விகிதங்கள் அக்டோபர் 1 முதல் நடைமுறைக்கு வரும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 அல்லது அதற்கு முன் இவை வெளியிடப்படும்.**

கூடுதல் தகவல் தெரிந்து கொள்ள, தற்போதைய குறைந்தபட்ச ஊதியத்தை சரிபார்க்க பின்வரும் தளத்தைப் பார்வையிடவும்: www.ontario.ca/document/your-guide-employment-standards-act-0/minimum-wage

### வேலை நேரம்

| தினசரி அளவு | வாராந்த அளவு | ஓய்வுநேரங்கள் |
|---|---|---|
| **8 மணித்தியாலம்** ஒரு வேலைநாளில் அதிகபட்சமான வேலைநேரம் ஆகும். வழமையான வேலை நாள் ஒன்றில் 8 மணி நேரத்திலும் அதிகமான வேலைநேரத்தை வேலைவழங்குநர் ஸ்தாபித்தால், அந்த அளவு ஆகக்கூடிய வேலைநேரமாக மாறும். | **48 மணித்தியாலம்** ஒரு வாரத்தில் உங்களை வேலைசெய்யும்படி கோரக்கூடிய அதிகபட்சமான அளவு வேலைநேரம் ஆகும். | **30 நிமிடங்கள்** ஊதியமுள்ள உணவு நேரத்துக்கு உங்களுக்கு உரிமம் உண்டு (5 மணித்தியாலத்துக்கு மேற்படாத வேலையின் பின்). அதனை 2 குறுகிய ஓய்வு நேரங்களாகப் பிரிப்பது பற்றி உங்களுடைய வேலைவழங்குநருடன் சேர்ந்து நீங்கள் முடிவெடுக்கலாம். |

### ஊதியத்துக்கு மேலான கொடுப்பனவுகள்

#### மேலதிக வேலை நேரத்துக்கான கொடுப்பனவு

- பணியாளர் மற்றும் வேலைவழங்குநர் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.
- குறிப்பிட்டுச் சொல்லப்படாவிட்டால், 44 மணித்தியாலத்துக்கு மேல் வேலை செய்த அத்தனை மணித்தியாலத்துக்கும் உங்களுடைய வழமையான ஊதியத்தின் 1.5 மடங்கு வழங்கப்பட வேண்டும் (“ஒன்றரை மடங்கு”).
- நிலைமைகளுக்கு ஏற்ப, வழமையான மணித்தியாலத்திலும் அதிகமாக வேலை செய்த மணித்தியாலங்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக வேறுபட்ட விதிமுறைகள் உள்ளன.

#### பொது விடுமுறை நாள் கொடுப்பனவு

- அனேகமான பணியாளர்களுக்கு பொது விடுமுறை நாட்கள் ஊதியமுள்ள லீவு நாட்கள் ஆக இருப்பதற்கான உரிமம் உள்ளது.
- பொது விடுமுறை நாட்களுக்கான உரிமம் அனேகமான பணியாளர்களுக்கு இருக்கும் அதேவேளையில், ESAஇன் பொது விடுமுறைகள் பிரிவின் உள் அடங்காத வேலைகளில் சில பணியாளர்கள் வேலைசெய்கிறார்கள்.

#### விடுமுறை காலக் கொடுப்பனவு

- வருடாந்தம், வேலைநேரத்துக்கு மேலதிகமான நேரம் உள்ளடங்கலான உங்களின் வருடாந்த வருமானத்தின் 4% க்குச் சமனான விடுமுறைக் கொடுப்பனவுடன் கூடிய 2 வார கால விடுமுறைக்கு உங்களுக்கு உரித்துண்டு.
- ஒரே வேலைவழங்குநருடன் 5 வருடங்கள் வேலைசெய்த பின்னர் வேலைநேரத்துக்கு மேலதிகமான நேரம் உள்ளடங்கலான உங்களின் வருடாந்த வருமானத்தின் 6% க்குச் சமனான விடுமுறைக் கொடுப்பனவுடன் கூடிய 3 வார கால விடுமுறைக்கு உங்களுக்கு உரித்துண்டு.

### ஊதியத்தில் கழிவுகள்

பின்வரும் மூன்று நிலைமைகளில் உங்களுடைய ஊதியத்திலிருந்து கழிப்பதற்கு வேலைவழங்குநர் ஒருவருக்கு சட்டரீதியான உரிமை உண்டு:

#### 01 அரசாங்கக் கழிவுகள்

இவை, மத்திய மற்றும் மாகாண சட்டங்களுக்கேற்ப ஒரு வேலைவழங்குநர் கழிக்கும் கழிவுகளாகும்.

#### 02 எழுத்துரீதியான அங்கீகாரம்

எழுத்துரீதியான அங்கீகாரத்தை நீங்கள் வழங்கினால் ஒரு வேலைவழங்குநர் உங்களுடைய ஊதியத்தில் கழிவுகளைச் செய்யமுடியும்.

#### 03 நீதிமன்றக் கட்டளைகள்

பணியாளர் ஒருவரிடமிருந்து வேலைவழங்குநர் எவ்வளவு பணம் கழிக்க வேண்டுமென்பதை நீதிமன்றம் ஒன்று தீர்மானிக்கக்கூடும்.



### நலமின்மைக்கான விடுப்பு

ஒன்ராறியோவில், தனிப்பட்ட நலமின்மை, ஊறு/வலி அல்லது மருத்துவ அவசரநிலைக்கான விடுப்பை, தொழிலைப் பாதிக்காத ஊதியமற்ற விடுப்பாக ஒவ்வொரு நடப்பாண்டிலும் மூன்று நாட்கள் வரைக்கும் எடுப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது.

### குடும்பப் பொறுப்புக்கான விடுப்பு

தொழிலைப் பாதிக்காத ஊதியமற்ற விடுப்பாக ஒவ்வொரு நடப்பாண்டிலும் மூன்று நாட்கள் எடுப்பதற்கு அனேகமான ஒன்ராறியோப் பணியாளர்களுக்கு உரித்துண்டு. இது குடும்பப் பொறுப்புக்கான விடுப்பு எனப்படும், அத்துடன் நலமின்மை, ஊறு/வலி, மருத்துவ அவசரநிலை அல்லது அவசர விடயங்களுக்கு இது பயன்படுத்தப்படலாம்.

### இழப்புக்கான விடுப்பு

குறித்த குடும்ப அங்கத்தவர்களின் மரணத்துக்காக, தொழிலைப் பாதிக்காத ஊதியமற்ற விடுப்பாக ஒவ்வொரு நடப்பாண்டிலும் இரண்டு நாட்கள் வரைக்கும் எடுப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது.

### வேலை நீக்கம்

ஒன்ராறியோவில் பின்வருவனவற்றை வேலைவழங்குநர் செய்தால், நீங்கள் வேலைநீக்கப்பட்டதாகக் கருதப்படுவீர்கள்:

- பணம் வழங்க முடியாத நிலையில் அல்லது கடன் தீர்க்க முடியாத நிலையில் வேலைவழங்குநர் இருப்பதால் உங்களுக்கு வேலை வழங்காது விடல் உள்ளடங்கலாக உங்களின் வேலையில் மாற்றம் ஏற்படுத்தல் அல்லது உங்களை வேலையிலிருந்து நீக்கல்;
- உங்களுடனான ஒப்பந்தத்தை மீறல் காரணமாக நியாயமான கால இடைவெளியில் நீங்கள் ராஜினமாச் செய்தல்; மற்றும்/அல்லது
- தற்காலிகமான வேலை நிறுத்தத்தை விட அதிகமான காலத்துக்கு நீங்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருத்தல்.

### ஆதாரவளங்கள்

EMPLOYMENT STANDARDS ACT (ESA):
**www.ontario.ca/laws/statute/00e41**

EMPLOYMENT STANDARDS FAQS:
**www.labour.gov.on.ca/english/es/faqs/general.php**

LIGHTHOUSE INITIATIVE
PREVENTION LINK

PREVENTION LINK

cope LOCAL 343

preventionlink.ca